கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் நடைபெற்ற 16வது நிதிக்குழு தொடர்பான மாநிலங்களின் நிதி அமைச்சர்கள் கூட்டத்தில், தமிழ்நாடு அரசின் சார்பில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிதித் துறை அரசு முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித் துறை, 16வது நிதிக்குழு சிறப்பு அலுவலர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்னிட், நிதித்துறை அரசு துணை செயலாளர் (வரவு செலவு) பிரத்திக் தாயள், ஆகியோர்க லந்து கொண்டனர்.

ஒன்றிய அரசு, சமீபத்தில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த வக்ஃப் சட்டத் திருத்த மசோதாவுக்கு நாடு முழுவதும் பல்வேறு எதிர்ப்புகள் எழுந்துள்ள நிலையில் வக்ஃப் வாரிய சட்டத் திருத்த மசோதாவை ஆய்வு செய்ய அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற கூட்டுக் குழு உறுப்பினர்களான திமுக துணை பொது செயலாளர் ஆ.ராசா மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் புதுக்கோட்டை அப்துல்லா ஆகியோரை சென்னை மயிலாப்பூரில் அமைந்துள்ள ஆ.ராசா அவர்களின் இல்லத்தில் தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை தலைவர் மவ்லானா,காஜா முயீனுத்தீன் பாகவி துணை பொது செயலாளர் மவ்லானா, இல்யாஸ் ரியாஜி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து மத்திய அரசு தாக்கல் செய்துள்ள சட்ட மசோதா தொடர்பாக தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை தயாரித்துள்ள அறிக்கையை ஆ.ராசா அவர்களிடம் வழங்கி அந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள அம்சங்களை நாடாளுமன்ற கூட்டு குழுவில் முன்வைக்க கோரிக்கை வைத்தனர்.

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை!

காஞ்சிபுரம் மாநகரத்தில் பேரறிஞர் அண்ணா மணி மண்டபம்!

மாநகர பொது உறுப்பினர் கூட்டத்தில் தீர்மானம்! மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன் அறிக்கை!

காஞ்சிபுரம், செப். 13 -

காஞ்சிபுரம் மாநகரில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்திட வேண்டும் என்று மாநகரக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ள்ளது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் காஞ்சிபுரம் மாநகர திமுக பொது உறுப்பினர் கூட்டம் அவைத் தலைவர் கே.எ. செங்குட்டுவன் தலைமையில் நேற்று நடைபெற்றது கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க சுந்தர் எம். எல். ஏ. கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார் உடன் சி.வி.எம்.பி. எழிலரசன் எம். எல். ஏ. மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் மாவட்ட பொருளாளர் சன் பிராண்ட் கே.ஆறுமுகம் மேயர் திருமதி மகாலட்சுமி மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ். ராமகிருஷ்ணன் உள்ளிட்ட பகுதி செயலாளர்கள் மாநகர நிர்வாகிகள் வட்டச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

நடந்து முடிந்த 17வது மக்களவை தேர்தலில் தி.மு.கழகம் IN.D.I.A கூட்டணி சார்பில் போட்டியிட காரணகர்த்திகராவாக விளங்கி அக்கூட்டணி தமிழ்நாட்டில் போட்டியிட்ட அனைத்து 40 தொகுதிகளில் வெற்றி பெறவைத்த திராவிட மாடல் நாயகன் கழக தலைவர் தமிழ் நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் அதற்கு உறுதுணையாக இருந்து வெற்றிபெற வைத்த இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலம் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் காஞ்சிபுரம் மாநகரம் வாழ்த்துகளையும் பாராட்டுகள் தெரிவித்து கொள்கிறது.

நடைபெற்ற மக்களவை தேர்தலில் காஞ்சிபுரம் தொகுதிக்கு கழக வேட்பாளர் சிறுவேடல் க.செல்வம் அவர்களுக்கு வாய்ப்பு வழங்கிய கழக தலைவர் இளந் தலைவர் உதயநிதி அவர்களுக்கு நன்றியும் கழக வேட்பாளரின் வெற்றிக்கு ஆலோசனையும் கடும் உழைப்பையும் அளித்து மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்வதுடன் காஞ்சிபுரம் மாநகரம் நான்கு பகுதி 51 வட்ட கழகம் முழுவதும் தினமும் காலை 2வார்டு மாலை 2வார்டுகள் என நடந்தே கழக வேட்பாளருக்கு பிரச்சாரம் செய்தும் மேற்படி பிரசாரத்தில் கழக மாணவர் அணி செயலாளர் காஞ்சி சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசனுக்கும் காஞ்சிபுரம் மேயர் எம்.மகாலட்சுமியுவராஜ்க்கும் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் சன்பிரான்டு கே.ஆறமுகம். எஸ்.கே.பி.சீனிவாசன் எஸ்.சிகாமணி மற்றும் மாநகர கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் இளைஞர் அணி மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் என அனைவருக்கும் காஞ்சிபுரம் மாநகர கழகம் சார்பில் நன்றியினை தெரிவித்து கொள்கிறது.

தி.மு.கழகத்தை தோற்றுவித்த காஞ்சி மண்ணின் மைந்தர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாளான செப்டம்பர் 15 அன்று மாநகர கழகத்தில் உள்ள அனைத்து வட்டக் கழகங்களிலும் கழக கொடியேற்றி ஒலி பெருக்கி அமைத்து கழக பாடல்களை ஒளிபரப்பி இனிப்புகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடிடவும் கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி வீடுகள் தோறும் கழக இரு வண்ணக் கொடியை ஏற்றி சிறப்பிக்குமாறு மாநகர கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

திராவிட முன்னேற்ற கழகத்தின் பவளவிழா ஆண்டை கழகத் தலைவர் அவர்களின் ஆனைப்படி முன்பெரும் விழாவை சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானிக்கபடுகிறது. கழக வழங்கிவரும் விருதுகளில் முதல் முறையாக தளபதி மு.க.ஸ்டாலின் விருது என வழங்கப்படும் என்ற முடிவுக்கும் மாநகர கழகம் நன்றியை தெரிவித்து கொள்கிறது.

காஞ்சி தலைவன் தென்னாட்டு பெர்னாட்ஷா திராவிட முன்னேற்ற கழகத்தினை தோற்றிவித்து தமிழ்நாடு என்ற நாட்டை மலர செய்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு காஞ்சிபுரத்தில் மய்யமான பகுதியில் ஒரு மணி மண்டபம் அமைத்து அதை சிறந்த சுற்றுலா தலமாக மாற்றிட வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்களுக்கு அன்பிடன் காஞ்சிபுரம் மாநகர கழகம் கோரிக்கை வைக்கிறது.

ஒன்றிய அரசு மூலம் முத் தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவம் பொறித்த 100 ரூபாய் நாணயத்தை ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களின் கையில் வெளியிடவைத்து அவரின் உரையின் மூலமே கலைஞரின் புகழ் பாட வைத்த நிகழ்ச்சியை வடிவமைத்த கழக தலைவர் அவர்களுக்கு பெரும் பாராட்டும் நன்றியும் தெரிவித்து கொள்கிறது.

நெசவாளர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் காஞ்சிபுரம் மாநகர பகுதியில் கழக ஆட்சியில் தொடர்ச்சியாக ஆண்டிற்கு 10% சதவீதம் அகவிலை படியை உயர்த்தி வருவதற்கும் 10% சதவீதம் கூலி உயர்வு வழங்கிய தமிழ் நாடு முதல்வர் அவர்களுக்கும் கைத்தறிதுறை அமைச்சருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டனு.

சென்னைத் தெற்கு மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, செப். 13 -

சென்னைத் தெற்கு மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் வருகிற 15 -9-2024 - ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி அளவில், சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தி.மு.க. பவள விழா - முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

எனவே இக்கூட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட தொகுதி பொறுப்பாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், ஒன்றியக்கழக செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாவட்டத் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் காஞ்சிபுரம் மாநகர திமுக பொது உறுப்பினர் கூட்டம் அவைத் தலைவர் கே.எ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் சி வி எம் பி எழிலரசன் எம் எல் ஏ, மாநகர செயலாளர் சி கே வி தமிழ்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்ட் கே ஆறுமுகம், மேயர் மகாலட்சுமி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி எஸ் ராமகிருஷ்ணன், உள்ளிட்ட பகுதி செயலாளர்கள், மாநகர நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

நெல்லை மத்திய மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

நெல்லை, செப். 13 -

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பாளை பி.பி.எல். திருமண மண்டபத்தில் மாவட்ட அவை தலைவர் முருகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

இதில் சுப. சீதாராமன்,மாலைராஜா, விஜிலா சத்யானந்த்,பெருமாள், அப்துல்வகாப் எம்.எல்.ஏ. சு.சுப்பிரமணியன்,ஏ.எல்.எஸ். லட்சுமணன், பேச்சிபாண்டியன், தர்மன்,சுரேஷ்,கிரிஜா குமார், சரவணன்,ராஜ்,சுப்பிரமணியன், நமச்சிவாயம், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. – தி.அ.முகமது சகி – டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. – ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

இளைஞர்களுக்கெல்லாம் நாம் வழிவிட்டாக வேண்டும்!

அமைச்சர் துரைமுருகன் சிறப்புரை!

வேலூர், செப். 13 -

வேலூர் மாநகர தி.மு.க .பொது உறுப்பினர்கள் கூட்டம் பேபி திருமண மண்டபத்தில் நடந்தது. கூட்டத்துக்கு மாநகர அவைத்தலைவர் சூரி என்ற கோவிந்தன் தலைமை தாங்கினார். மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் , மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய் துணை மேயர் எம்.சுனில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் எம் .எல் .ஏ அனைவரையும் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் அவர் பேசியதாவது :

எதிரிகள் கூட பாராட்டுகிற அளவிற்கு இந்த கட்சியிலே நான் இருந்ததால் தான் இன்றைக்கு அண்ணா உட்கார்ந்த இடத்தில் நான் உட்கார்ந்திருக்கிறேன் .

அரசியலில் சில சந்தர்ப்ப சூழல்களில் வெறுப்பு வரும், தோல்வி வரும், அவமானம் வரும், நான் படாத அவமானமா, நான் படாததோல்வியா, நான் சந்திக்காத எதிர்ப்புகளா, எனவேதான் சொல்லுகிறேன் இயக்கத்தில் பிடிப்பு வேண்டும். இளைஞர்கள் வருகிறார்கள், இன்றைக்கு நான் வரவேற்கிறேன் ஏனென்றால் நாங்கள் எல்லாம் இளைஞர்களாக வந்தோம். அண்ணா சொன்னார் நாற்றங்காலில் இருக்கிற பயிர் போல பிடுங்கி சேற்றில் நட்டால்தான் பலன் கொடுக்கும். நாற்றங்காலாகவே விட்டு விட்டால் பாழாகிவிடும் ஆகவே தகுந்த நேரத்தில் உங்களை கட்சியில் சேர்த்து பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னவர், அண்ணா .

ஆகவே சொல்லுகிறேன் இளைஞர்கள் வரவேண்டும் இளைஞர்கள் இல்லாமல் ஒரு காலம் கட்சி வெளியே போய்விடும் ஆகவே இளைஞர்களுக்கு வழி விடுங்கள் ஆனால் வருகிற இளைஞர்கள் கொஞ்சம் தடம் பார்த்து வாருங்கள். கட்சியை நினைத்து வாருங்கள் வந்த உடனே என்ன கிடைக்கும், என எதிர்பார்க்காதீர்கள். உன்னைவிட உழைத்தவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். உதைபட்டவர்கள் இங்கு நிறைய பேர் இருக்கிறார்கள். கட்சியினால் குடும்பத்தில் கெட்ட பெயர் வாங்கியவர்கள் இருக்கிறார்கள் .அவர்களும் இந்த கட்சியிலே தியாகம் செய்திருக்கிறார்கள் .

ஆகவே தான் இளைஞர்களுக்கு நாம் வழிவிட்டாக வேண்டும் இந்த நிலையை நாம் நினைத்தால் தான் ஒரு இயக்கத்தில் நிலைத்திருக்க முடியும். நீங்கள் நினைத்துப் பார்த்ததுண்டா மிசாவில் எல்லோரும் நமது கட்சியை போய் விடும் என நினைத்தார்கள். நான் இரு பெரும் தலைவர்களோடு மிக நெருக்கமாகவும் அண்ணாவோடும் பழகியிருக்கிறேன். ஆகவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம் அரசியல் என்பது பொழுதுபோக்கு மடம் அல்ல, அரசியல் என்பது வியாபாரம் அல்ல அரசியல் என்பது கொள்கை பிடிப்பு கொள்கை, நியாயம் இந்த கட்சியில் நாம் இருக்கிறோம் என்பதே ஒரு பெருமைதான். இவர் அவர் பேசினார். நிகழ்ச்சி யில் புரவலர் துரை சிங்காரம், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் , தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.ஏழுமலை ஏ.ஜி ஆறுமுகம் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வி.தயா நிதி, எஸ்.கதிரேசன்,

சி.சந்திரசேகரன், மாநகர துணைச் செயலாளர்கள் ஏ.ஆர் முன்னாஷெரிப்,

ஒய்.தேவநேசன், தங்க மணி ஆனந்தன் மாநகரப் பொருளாளர் நா.அசோகன் பகுதி செயலாளர்கள் ஜி.வன்னிய ராஜா, என்.பரமசிவம், ஆர்.பி.இ சசிகுமார்,

வி.ஜி.கே சுந்தரவிஜி, சத்தியமூர்த்தி ஆர்.கே.ஐயப்பன் முருகப்பெருமாள் கொள்கை பரப்பு துணைச் செயலாளர்கள் சேர்க்காடு டி.கென்னடி, ஜி.ரமேஷ், மாநில சிறு பான்மையினர் நல உரிமை பிரிவு துணைச் செயலாளர் எம். நூல்லா, மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் ராஜேஸ்வரி மோகன் காந்தி, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் பிரம்மபுரம் பழனி மாநகர திமுக பிரதிநிதி வி.ஆர் பூபதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் இந்திய கண்டமே திரும்பி பார்க்கும் வகையில் களம் கண்ட 40 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு வெற்றியை தேடித்தந்த குறிப்பாக வேலூர், அரக்கோணம் நாடாளுமன்ற வேட்பாளர்களுக்கு கோட்டைவெளி மைதானத்தில் கழகத்தின் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்த கழக தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், கழகத்தின் பொதுச் செயலாளர் நீர்வளம் மற்றும் கனிம வளம் சுரங்கத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும் மற்றும் மண்டி வீதியில் பிரச்சாரம் மேற்கொண்ட மாநில இளைஞ ரணி செயலாளர் இளைஞர் நலன்மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

2 லட்சத்து 15 ஆயிரத்து 702 வாக்குகள் வித்தியா சத்தில் நாடாளுமன்ற வேட்பாளர் டி.எம் கதிர் ஆனந்த் அவர்களுக்கு வெற்றியை தேடித்தந்த வேலூர் நாடாளுமன்ற வாக்காளர் பெருமக்களுக்கும் 3 லட்சத்து 6 ஆயிரத்து 559 வாக்குகள் வித்தியா சத்தில் ஜெகத்ரட்சகன் அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்த அரக்கோணம் நாடாளுமன்ற வாக்காளர் பெருமக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்வதுடன் அந்த வெற்றிக்கு இரவு பகல் பாராமல் களத்தில் நின்று பணியாற்றிய ஒட்டுமொத்த கழக நிர்வாகிகள், கழக உறுப்பினர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தோழர்கள் என அனைவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது. தீர்மானம் _2 தந்தை பெரியாரின் கொள்கைகளை ஜனநாயகவழியில்சட்டங்களாகவும் திட்டங்களாகவும் நிறைவேற்றிடும் நோக்கத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் கட்டி காக்கப்பட்ட திராவிட முன்னேற்ற கழகம் எனும் அரசியல் பேரியக்கம் 75 ஆண்டுகளுக்கு மக்கள் பணியாற்றி 2024 ஆம் ஆண்டு தனது பவள விழா நிறைவு விழாவை கொண்டாடுகிறது எனவே கழக கொடி கம்பங்கள் அனைத்தும் புதுப்பி க்கப்பட்டு நம் இரு வண்ணக் கொடியை ஏற்றி பட்டொளி வீசி பறந்திட செய்திட வேண்டும் என கழகத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி வீதிகள் தோறும் பறக்கும் இரு வண்ண கொடி நம் வீடுகள் தோறும் பறந்திட வேண்டும் . கழக கொடி பறக்காத வீடுகள் இல்லை என்னும் வகையில் பவள விழாவை முன்னிட்டு அனைவரது இல்லங்கள், அலுவலகங்கள் வணிக வளாகங்களில் கழகக்கொடி ஏற்றிட வேண்டும் என அனைவரையும் கூட்டம் கேட்டுக் கொள்கிறது. தீர்மானம் 3 செப்டம்பர் 17 சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெற உள்ள கழக முப்பெரும் விழாவில் திரளாக பங்கேற்பதுடன் விழாவில் தலைவர் கலைஞர் பெயரில் விருதுபெறும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் அவர்களுக்கு வாழ்த்துக்களை கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது. தீர்மானம் 4

தமிழக பொருளாதாரம் மேம்படவும் இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறும்வகையில் அன்னிய முதலீடுகள் மற்றும் புதிய தொழில் நிறுவனங்களை தமிழகத்திற்கு கொண்டுவர வெளிநாடு பயணம் மேற்கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது. தீர்மானம் 5 2026 நடைபெற இருக்கின்ற தமிழக சட்டமன்ற பொது தேர்தலில் கழகத் தலைவர் அவர்கள் 200 தொகுதிகளில் வெற்றி இலக்கு என அறிவிப்பு செய்துள்ளார்.

எனவே கழகத் தலைவர் தலைமையில் பொற்கால ஆட்சியை தொடங்கிட இன்று முதல் தேர்தல் ஆயத்த பணிகளை செய்வனே செய்திடகேட்டுக் கொள்வதுடன் கழக ஆட்சியில் நிறைவேற்றி வரும் மக்கள் நலத் திட்டங்கள் அனைவருக்கும் சென்றடையும் வகையில் தங்கள் பணிகளை அமைத்துக் கொள்ள, அனைத்து கழக நிர்வாக பெருமக்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் பொது உறுப்பினர்களை இக்கூட்டம் ஏகமனதாக கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அண்ணா நகர் பகுதி திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் சென்னை அரும்பாக்கம் தனியார் ஹாலில் நடந்தது. இதில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளரும் ஆன தயாநிதிமாறன் எம்.பி. பேசினார். அருகில் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் சென்னை மாநகராட்சி ஆளும் கட்சித் தலைவர் இராமலிங்கம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், பகுதி அவைத்தலைவர் ஏ.கே.மூர்த்தி, பகுதி துணைச் செயலாளர் பானுமதி கிருஷ்ணசாமி, 105 வட்ட செயலாளர்கள் அதியமான், பொன்னுரங்கம், 107அ வட்ட செயலாளர் வி.எம்.சிவா, 106அ வட்ட செயலாளர்கள் ந.ரவீந்திரகுமார், மகேஷ் ராஜா. மாவட்ட நிர்வாகிகள் விகடர்.வி.எஸ். கலை, சங்கீதா .ராணி ராஜேந்திரன் எம்சி, யோகேஸ்வரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.